13th November 1961]

SRI A. GOVINDASAMI : *புள்ளிவிவரம் கொடுக்கிற நேரத்தில் ஒரு சில மாநிலங்களைப்பற்றி மாத்திரம், அதாவது நம் மாநிலத்தை விட குறைவாக இருக்கிற மாநிலங்களைப் பற்றி மாத்திரம் குறிப்பிட்டுவிட்டு, மற்ற மாநிலங்களைப்பற்றி குறிப்பிடாததன் நோக்கம் என்ன ?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *உப கேள்வி கேட்பதற்கு பதில் சொன்னேன். எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்க முடியும். புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. தனிக்கேள்வி போட்டால் எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்க முடியும்.*

SRI K. ANBAZHAGAN : *'பெர்காபிடா' இன்கம் வளர்ச்சி, அவர்கள் பெற்ற ஊதிய தொகையைப் பற்றிய குறிப்பில் 1951-52-லிருந்து 1956-57-க்குள்ள வளர்ச்சியைவிட, 1956-57-லிருந்து 1959-60-க்குள்ள வளர்ச்சி குறைவாகக் காட்டப்பட்டிருக்கிறதே ?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *முதல் ஐந்து வருஷங்களுக்கு 10.43 சத விகிதம் அடுத்த 3 வருஷங்களுக்கு 6.03 சத விகிதம். ஆகையினாலே, அடுத்த இரண்டு வருஷங்களுக்கும் கணக்கு எடுக்கும்பொழுது இதே அளவுக்கு 10 சத விகிதம் வரும்.*

SRI A. A. RASHEED : May I know, Sir, what is the percentage of per-capita tax when compared to the percentage of per capita income?

THE HON. SRI C. SUBRAMANIAM : *டாக்ஸஸ் 1960-61-ல் சென்னை ராஜ்ய சர்க்கார் போட்டிருக்கிறது மட்டும் ரூ. 10.61* as against per capita income of Rs. 317.

SRI T. T. DANIEL : While it is gratifying to note that there is rise in per capita income from year to year, may we know whether this is due to the successful implementation of the Second Plan?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is one of the contributing factors rather than the main contributing factor.

Government Hospital, Vriddhachalam

*2038 *Q.*—**SRI A. GOVINDASAMI (on behalf of SRI M. SELVARAJ):** *கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் நகரத்திலுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரியை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விஸ்தரிக்க திட்டமுண்டா ?

(இ) எத்தனை அதிகப்படியான படுக்கைகள் ஏற்படுத்த உத்தேசம் ?

(உ) இந்த ஆஸ்பத்திரியின் அட்வைசரி கமிட்டி எத்தனை தடவை கூடியது ?

(எ) இந்த கமிட்டியின் ஆலோசனைகள் என்ன ?

(ஐ) அவைகளின்மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes. Sir.

(இ) Forty.

(உ) Once, on 2nd November 1960.

(எ) and (ஐ) A statement[a] is placed on the table of the House.

SRI A. GOVINDASAMI : இந்த மேஜைமீது வைத்திருக்கிற அறிக்கையில் ஒரு நிலச்சொந்தக்காரர் நிலம் கொடுக்க முன் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தை ஏன் இன்னும் சர்க்கார் எடுத்துக் கொள்ளவில்லை? நிலத்தை எப்பொழுது கொடுப்பதாக அவர் அரசாங்கத்திற்கு அறிவித்தார்?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Director is taking necessary action in this regard அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கடைசியாக எந்த கட்டத்தில் இருக்கிறது என்பது தெரியவில்லை. முன்னால் கேள்விக்கு பதிலிலே அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

SRI A. GOVINDASAMI : என்னுடைய கேள்வி அந்த நிலச்சொந்தக்காரர் எப்பொழுது நிலத்தை கொடுக்க முன் வந்தார்? ஏன் அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளுவதில் காலதாமதம்?

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி கொடுக்கிறேன் என்று முதலிலே வாயாலே சொன்னார். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது . . . . (சிரிப்பு).

SRI A. GOVINDASAMI : தலைவர் அவர்களே, வாயாலே சொன்னது அமைச்சர் அவர்களுக்கு எப்படி தெரியும்? கடிதம் மூலமாக வந்ததை வைத்துக் கொண்டுதானே இப்பொழுது பதில் சொல்லுகிறார்?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் போய் அந்த இடத்தை எல்லாம் பார்த்தேன்.

Development of Tiruttani

* 2039 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதிதாக நம்முடன் சேர்ந்த திருத்தணிப் பகுதியின் அபிவிருத்திக்கு இதுவரை சர்க்கார் என்ன செய்திருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : A note[b] on the action taken for the development of Tiruttani area, since its transfer from Andhra Pradesh, is placed on the table of the House.

SRI K. VINAYAKAM : Sir, while going through this note, I find something very important missing. Sir, may I know whether the potential possibilities of industrial development in this area has been investigated and if so what steps have been taken to raise it to the standard of other parts of our State?

(a) Printed as Appendix II on pages 456–457 infra.

Printed as Appendix III on pages 457–459 infra.